
# ஆர்ட் போஸ்ட்



ட்ராட்ஸ்கி மருது



சுயஓவியம்

இன்றைய கலை – தனிமனிதனுக்குச் சொந்தமான ஒரு தீவில் சென்று உட்கார்ந்து கொண்டுவிட்டது. ஒவ்வொரு ஓவியனுக்கும், சிற்பிக்கும் தனக்கென ஒரு உலகத்தை, பாணியைப் படைத்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டுவிட்டது. இதனால்தான் ட்ராட்ஸ்கி மருது போன்ற ஓவியர்கள், தங்களுக்கு மட்டுமே சொந்தமான ஒரு விந்தை



உலகத்தைப் படைத்து வெற்றி பெற முடிகிறது.

ட்ராட்ஸ்கி மருதுவின் ஓவிய உலகத்துடன் பார்வையாளர்கள் முழுமனதுடன் ஒத்துழைக்கத் தயாராக உள்ளனர். முலை கனத்த கிளிப்பெண்ணும், பாதி உடல் தோலுரித்து எலும்பு காட்டும் எருதும், தன் முகமூடியே தன்னைக் கேலி செய்யும் கோமாளி அழகியும் ரசிக்கப்படுவது ட்ராட்ஸ்கி மருதுவின் உள் உலகத்துக்குக் கிடைத்த அங்கீகாரம்.

முப்பத்தேழு வயது நிரம்பிய இந்த ஓவியரின் படைப்புகள் பழந்தமிழனின் சிற்ப, ஓவியப் படைப்புகளிலிருந்து இன்றைய அதிநவீன மேலை ஓவியர்களின் படைப்புகள் வரை அனைத்துக் கலைக்கூறுகளையும் உட்கொண்டவை. ஹெய்னிஸ் எடல்மேன், மில்டன் கிளேசர் ஆகியோரின் படைப்புகளும், டாமி அன்கேரிர் படைத்த அங்கதம் நிரம்பிய கார்ட்டூன்களும் இவர்மீது தங்களது பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

உதாரணமாக இவரது 'பறக்கும் உருவம்' சித்திரம் ஒன்றை எடுத்துக்கொண்டால் அதன் இறக்கைகள் பட்டாம்பூச்சி இறக்கைகள் போலத் தோன்றினாலும் அது உண்மையில் பட்டாம்பூச்சியின் இறக்கைகள் அல்ல! இது ஒரு அலங்காரப் பூ வேலை – டிசைன் மட்டுமே. இதற்குத் தமிழ் மரபுரீதியான ஒரு புரிதல் அடிப்படையாக இருப்பதாக நான் கருதுகிறேன்.

நமது பழைய காளை சிற்பம் ஒன்றை எடுத்துக் கொண்டால் அதில் காது இருக்கும் இடத்தில் ஒரு இலையையே காதாக அமைத்திருப்பதைக் காணலாம். இதேபோல் ஒரு யாளியின் சிற்பத்தை எடுத்துக் கொண்டால் யாளியின் பிதுங்கிய விழியிலிருந்து புருவம் ஒரு அலங்கார பூ வேலையாக நீண்டு அதுவே ஒரு கொம்பாகவும் வளர்ந்திருக்கும். இதேபோன்றுதான் மருதுவின் பறக்கும் உருவம் சித்திரத்தை எடுத்துக் கொண்டாலும் அதன் தலையிலிருக்கும் பூ வேலைப்பாட்டிலிருந்து நத்தைக்கு இருப்பது போன்ற தொடு உணர்ச்சி ஏற்படுத்துகின்ற இரண்டு சதைக் கொம்புகள் இருப்பதைக் காணலாம். படுத்திருப்பது போன்ற பாவனையில் இருக்கும் உடம்பு, சுகமாக காற்றில் பறப்பது போன்று நீண்டிருக்கும் கால்களின் அமைப்பு இவற்றினாலேயே அந்த உருவம் பறக்கிறது என்கிற உணர்வை நமக்கு ஏற்படுத்தி விடுகிறார்.

நமது சித்தன்னவாசல், அஜந்தா ஓவியங்களில்கூட இதுபோல உடம்பின் அமைப்பு மூலமாகவே ஒரு உருவம் பறக்கிறது என்பதை இறக்கைகளை இணைத்துக் காட்டாமலேயே நமது பழைய மேதைகள் சாதித்துக் காண்பித்துள்ளனர்.

ட்ராட்ஸ்கி மருதுவின் ஓவியப் பார்வையை வளர்த்ததில் அவரது தந்தை மருதையனின் பங்கு அதிகம். காலையில் தன் மகன் எழுந்திருக்கும்போதே படங்களைப் பார்த்துக் கொண்டே எழவேண்டும் என்பதற்காகப் படம் போட்ட பல புத்தகங்களைப் படுக்கையிலேயே தன் தந்தையார் வைத்திருப்பார் என்று நினைவுகூர்கிறார் ட்ராட்ஸ்கி மருது.

மருதுவின் படைப்புகள் அனைத்தும் சென்னை ஓவியக் கல்லூரியில் படித்தபோது கூர் தீட்டப் பெற்றவை. இவர், கடந்த பதினைந்து ஆண்டுகளில் மேலைநாட்டு ஓவியர்களிடமிருந்து பார்த்துத் தெரிந்து கொண்டவை ஏராளம்! இவரது எல்லாப் படைப்புகளும் ஆழமான, தன்னம்பிக்கை மிக்க கோடுகளின் பலத்தினால் சிறந்து நிற்பவை. இவரது வண்ண ஓவியத்தை எடுத்துக் கொண்டாலும்கூட காகிதத்தில் இருக்கும் வெற்றிடத்தை வண்ணங்களால் நிரப்புவதைக் காட்டிலும் வண்ணங்களினால் ஆன கோடுகளில் அதிக ஆர்வம் காட்டுவார் இவர்.

சிறுவயதில் ஏராளமான படக்கதைகளைப் படிக்கும் பழக்கம் கொண்டிருந்த இவர், அந்தச் சித்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் கதையைக் காட்டிலும் அவற்றுக்குள் இருக்கும் வேகத்தை, இயக்கத்தை அதிகம் கவனித்து வந்தவர். இதனாலேயே இவரது எல்லாப் படைப்புகளிலும் அசையும் தன்மையை விவரிக்கும் தன்னை அதிகமாக இருக்கும்.


இவரது 'தலை ஆட்டும் நாய்' சித்திரத்தை எடுத்துக் கொண்டால், நாய் தன் தலையை வேகமாக எல்லாப் பக்கங்களிலும் அசைப்பதைத் தீவிரமான, விசைச் சக்தி கொண்ட கோடுகளினால் சாதித்திருப்பதை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது.

சித்திரங்களின் அசையும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு 'அனிமேஷன்' செய்வதிலே தனி ஆர்வம் கொண்டவர் இவர். இவரை ஒரு பாப் (Pop) ஓவியர் என்றுகூட வர்ணிப்பதில் தவறில்லை.

ஆங்கிலத்தில் 'பாப்' என்பது 'மக்களுக்கிடையே பிரசித்தம் அடைதல்' என்கிற பொருள்கொண்ட 'பாப்புலர்' (Popular) என்கிற வார்த்தையின் சுருக்கம்.

ஓவியப் பாணியில் பல புரட்சிகளைச் செய்த மேலை ஓவியர்களில், குறிப்பாக ஆண்டி வெர்ஹோல் போன்றவர்கள், கலையைப் பொதுமக்களிடம் நேரடியாக எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இவர்களைப் போலவே ட்ராட்ஸ்கி மருதுவும்கூடத் தனது கலையைப் பத்திரிகை, சுவரொட்டி, புத்தக அட்டைகள் ஆகியவற்றின் மூலமாக மக்களிடம் கொண்டு செல்ல விரும்புகிறார். இதை மேலும் மக்களிடம் கொண்டு செல்ல முழு சுதந்திரத்துடன்கூடிய ஒரு கார்ட்டூன் திரைப்படம் செய்யவேண்டும் என்ற கனவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்.

இவரது படைப்புகளில் அதி விநோதத் தன்மைகள் இருப்பது போலவே ஒரு நையாண்டியும் எப்போதும் உடன் இழைவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக ஒரு படைப்பில் – கருங்கூந்தல் புரள பெண்ணின் உடம்பும், மீனின் துடுப்புகளும், தவளையின் வயிறும் பின்னங்கால்களும் கொண்ட ஒரு விநோத உருவம் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கிறது. இந்த உருவத்தை மனிதனா, குரங்கா என்று சொல்ல முடியாத கறுப்பும், வெள்ளையுமான இரு உருவங்கள் கைகொட்டி நகைக்கின்றன. இதில் சிரிப்பு என்பது துண்டு துணுக்குகளான கோடுகளின் சிதறலாக வந்து விழுகிறது. மொத்த சித்திரத்தில் என்னை நீயும், உன்னை நானுமாகக் கேலி செய்யும் ஒரு நையாண்டி மிகத் திறமையுடன் வெளிப்படுகிறது.



ஒருமுறை மருத்துவமனையொன்றில் முகம் முழுவதும் பிளாஸ்திரி போடப்பட்ட ஒரு நோயாளியைக் காண நேர்ந்தபோது அதுவே ஒரு முகமூடியாக மாறிவிட்டதை உணர்ந்தார். அப்போதுதான் தன் 'முகமூடி வரிசை' சித்திரங்களைச் செய்தார். முகங்களைக் காட்டிலும் முகமூடிகள் அதிகமாக அபிநயிக்கின்றன என்று உணர்ந்த இவர், முகத்தை முகமூடி கேலி செய்வது போன்று பல சித்திரங்களைச் செய்தார்.

ட்ராட்ஸ்கி மருதுவின் விந்தை உலகம் எங்கிருந்து என்று தெரியாத ஓரிடத்திலிருந்து புறப்பட்டு ஏதென்று தெரியாத ஒரு இலக்கு நோக்கிச் செல்பவை. இவை விந்தையாக இருக்கும் அதே அளவுக்கு அசல் தன்மையானவை. தனித்துவத்துடன் இருக்கும் அளவுக்கு அந்தரங்கமானவை என்றுகூடச் சொல்லலாம். எல்லாப் படைப்புகளும் அவரது ஆற்றொழுக்கான, இயக்கம் நிறைந்த கோடுகளை முதுகெலும்பாகக் கொண்டுள்ளவை.

கோடுகளின் மொழியில், தன் அந்தரங்கமான கனவுலகத்தை மக்களிடம் பகிர்ந்துகொள்கிறார் ட்ராட்ஸ்கி மருது.

– இந்திரன்